بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# ஜும்ஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** *(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)*

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசல், இலண்டன்**

March 28
2014

**மொழியாக்கம் : முஅல்லிம் M. நிஸாமுத்தீன் சாஹிப்**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹின் உண்மைக்கான அடையாளங்கள்

***தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:***

இன்றும் நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அடையாளங்கள் தொடர்பான மேற்கோள்களையும், அவர்கள் தாமே கூறியுள்ள சில சம்பவங்களையும், மக்கள் தாமே முன் வந்து கூறிய சில சம்பவங்களையும் எடுத்து வைப்பேன்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

எனக்கு ஆதரவாக இறைவன் வெளிப்படுத்திய அற்புதங்களை இன்று முதல் அதாவது, 16 ஜூலை 1906 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொன்றாக எண்ணினால், அவை மூன்று இலட்சத்தை விட அதிகமாக இருக்கும் என்று நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். என்னுடைய சத்தியத்தின் மீது நம்பிக்கை இல்லா விட்டால், அதற்காக என்னால் சான்று தர முடியும். அவற்றுள் சில முன்னறிவிப்புகள் இறைவன் தனது வாக்குறுதிக்கேற்ப ஒவ்வொரு எதிரியின் தீங்கிலிருந்தும் என்னைப் பாதுகாத்தது தொடர்பானதும், சில அடையாளங்கள் ஒவ்வோரிடத்திலும் தனது வாக்குறுதிக்கேற்ப எனது தேவைகளை அவன் நிறைவேற்றித் தந்தது தொடர்பானதும், இன்னும் சில அடையாளங்கள், தனது வாக்குறுதியான إِنِّي مُهِينٌ مَنْ أَرَادَ إِهَانَتَكَ '*உன்னை இழிவுபடுத்த நினைப்பவரை நான் இழிவுபடுத்துவேன்*' என்ற முன்னறிவிப்பிற்கேற்ப எனது எதிரிகளை அவன் இழிவுபடுத்தியது தொடர்பானதும் ஆகும். சில அடையாளங்கள், என் மீது வழக்குத் தொடர்ந்தவர்கள் மீது அவனது முன்னறிவிப்பிற்கேற்ப அவன் எனக்கு வெற்றி அளித்தது தொடர்பானதும் ஆகும்.

நாம் இன்றும் பல்வேறு இடங்களில் பார்க்கிறோம். إِنِّي مُهِينٌ مَنْ أَرَادَ إِهَانَتَكَ என்ற முன்னறிவிப்பிற்கேற்ப பல்வேறு இடங்களிலிருந்து அறிக்கைகள் வருகின்றன. ஆப்பிரிக்காவிலிருந்தும், பிற இடங்களிலிருந்தும் வருகின்றன. அவை, அல்லாஹ் எவ்வாறு அவர்களை இழிவுபடுத்துகிறான் என்று காட்டுகின்றன. எங்காவது சிலர் இதுவரை பிடிக்கப்படாமல் இருந்தால் அவர்களும் அல்லாஹ்வின் கூற்றாகிய وَأُمْلِي لَهُمْ إِنَّ كَيْدِي مَتِينٌ என்ற வசனத்தை நினைவில் கொள்ள வேண்டும். அவர்கள் திரும்பாவிட்டால் அவர்களுக்கும் இறைவனது பிடி வரும் இன்ஷா அல்லாஹ்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

சில அடையாளங்கள், சிறிது அவகாசம் கழித்து தோன்றுகின்றன. ஏனெனில் உலகம் உருவாக்கப்பட்டது முதல் ஒரு பொய்யருக்கு இவ்வளவு நீண்ட அவகாசம் வழங்கப்பட்டதில்லை. சில அடையாளங்கள், இக்காலத்தைப் பார்க்கும் போது தோன்றுகின்றன. அதாவது, இக்காலம் ஓர் இமாம் தோன்றி இருப்பதை ஏற்றுக் கொள்கிறது. சில அடையாளங்கள், சில நண்பர்கள் தொடர்பானவை. அவர்கள் குறித்து நமது துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. சில அடையாளங்கள், எனது விஷமமிக்க எதிரிகள் மீது எனது துஆவின் தாக்கம் ஏற்பட்டது தொடர்பானவை. சில அடையாளங்கள், எனது துஆவினால் அபாயகரமான நோயிலிருந்து நிவாரணம் கிடைத்தது தொடர்பானவை. அந்த நிவாரணம் கிடைப்பதற்கு முன்னதாகவே அது குறித்து எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

சில அடையாளங்கள், என்னை உண்மைப்படுத்துவதற்காக பெரிய பெரிய தனிச் சிறப்புமிக்க மனிதர்கள், அவர்கள் புகழ்பெற்றவர்களாக இருந்தனர். அவர்களுக்கு கனவுகள் வந்தன. அம்மக்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை கனவில் கண்டனர். உதாரணமாக, ஷஜாதா நஷீன் சாஹிப், சாஹியுல் அஃலம் ஸிந்த் என்பவர் – இவருக்கு ஒரு இலட்சத்திற்கும் மேல் முரீதுகள் இருந்தனர். பிறகு சச்சாரனைச் சேர்ந்த காவாஜா குலாம் ஃபரீது சாஹிப் போன்றோர்.

சில அடையாளங்கள், எத்தகையவை எனில், ஆயிரக்கணக்கான பேர் கனவில், இவர் உண்மையாளர் என்றும், இறைவனிடமிருந்து வந்தவர் என்றும் கூறப்பட்டதற்கிணங்க என்னிடம் பைஅத் செய்தவர்கள் தொடர்பானவை. சிலர், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை கனவில் கண்டனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அம்மக்களிடம், உலகம் முடிவடைய உள்ளது. உலகின் கடைசி கலீஃபா மஸீஹ் மவ்வூது ஆவார் என்று கூறியிருந்தார்கள்.

சில அடையாளங்கள், எத்தகையவை எனில், சில பெரிய மனிதர்கள் நான் பிறக்கும் முன்பும், நான் வாலிபப் பருவத்தை அடையும் முன்பும், எனது பெயரைக் கூறி நான் மஸீஹ் மவ்வூது ஆகப்போவதாக தெரிவித்தது தொடர்பானவை. உதாரணமாக, நிஃமத்துல்லாஹ் வலி, மிஸான் குலாம் ஷா, ஜமால்பூர் லாதியானா ஆகியோர்.

பிறகு இன்னோரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். அதைக் கூறுவதற்கு முன் ஒன்றைக் கூறுகிறேன். இந்த சம்பவங்களை சிராஜ் ஹக் சாஹிப் நுஃமானி என்ற அஹ்மதி உடைய அண்ணன் ஷஜதா நஷீன் சாஹிப் – இவர் ஒரு பீர் ஆக இருந்தார். அவர் தனது அஹ்மதியான தம்பிக்கு ஒரு கடிதம் எழுதினார். நான் கஷ்ஃபே கபூர் செய்ய முடியும். மிர்ஸா சாஹிபால் செய்ய முடியுமா? கஷ்ஃபே கபூர் என்றால் இறந்தவரின் நிலைமையைக் கூற முடியும். அவர்களைச் சந்திக்கவும் வைக்க முடியும். இதனை மிர்ஸா சாஹிப் செய்ய முடியுமா? என்று கேட்டார். ***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:*** கஷ்ஃபே கபூர் விவகாரம் முற்றிலும் வீணான செயலாகும். எந்த மனிதர் உயிருள்ள இறைவனுடன் பேசுகிறாரோ, புத்தம் புதிய வஹி அவருக்கு வருகிறதோ, அதற்காக ஆயிரங்கள் அல்ல; இலட்சக்கணக்கில் சான்றுகள் இருக்கிறதோ அவருக்கு இறந்தவர்களுடன் பேசுவதற்கு என்ன அவசியம் வந்து விட்டது? அவர் ஏன் இறந்தவர்களைத் தேடி அலைய வேண்டும்? மேலும் இன்னார் இறந்தவர்களுடன் தான் பேசினார் என்பதற்கு என்ன ஆதாரம்? இங்கோ இலட்சக்கணக்கான ஆதாரங்கள் உள்ளன. இங்கு வருகிற ஒவ்வொரு கார்டும், ஒவ்வொரு பைசாவும் இறைவனது வல்லமைமிக்க அடையாளமாகும். ஏனெனில் ஒரு நீண்ட காலத்திற்கு முன்பு இறைவன் கூறி இருந்தான். يَأْتِيْكَ مِنْ كُلِّ فَجٍّ عَمِيْقٍ۔ يَأْتُوْنَ مِنْ كُلِّ فَجٍّ عَمِيْقٍ۔ எந்த மனிதரும் என்னை அறியாத நேரத்தில் இறைவன் என்னிடம் கூறினான். அந்த முன்னறிவிப்பு எவ்வளவு வேகமாக நிறைவேறிக் கொண்டிருக்கிறது! அதற்கு ஒப்பாக ஏதும் உண்டா? சுருக்கமாக, நாம் உயிருள்ள இறைவனை விட்டு விட்டு இறந்தவர்களைத் தேட வேண்டிய அவசியம் என்ன?

***பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

நினைவில் கொள்ளுங்கள்! நான் உண்மையாகவே கூறுகிறேன். நீங்கள் இறைவனது அடையாளங்களை அவமரியாதை செய்யாதீர்கள். அவற்றை இழப்பின் அடையாளம் என குறைத்து மதிப்பிடாதீர்கள். இறைவன் அதனை விரும்புவதில்லை. நேற்றைய தினம் நடந்த சம்பவத்தில், லேக்ராம் இறைவனது மகத்தான அடையாளத்திற்கேற்ப கொல்லப்பட்டான். கோடிக்கணக்கான மக்கள் அந்த முன்னறிவிப்பிற்கு சாட்சியாக உள்ளனர். சென்ற இடங்களில் எல்லாம் லேக்ராம் தானே அதனை பிரபல்யமாக்கி இருந்தார். அதனைப் பற்றி பேசினார். இந்த அடையாளம் இஸ்லாத்தின் உண்மைக்கு ஆதாரமாக அவரே கேட்டதாகும். உண்மை, பொய்யை அறிவதற்காக மதங்களுக்குள் இந்த தகுதி இருக்கிறதா என்று பார்க்க வேண்டும் என்று அவரே கூறியிருந்தார். பிறகு அவரே இஸ்லாத்தின் உண்மைக்கும் எனது உண்மைக்கும் தனது இரத்தத்தால் சாட்சி பகர்பவராக ஆகி விட்டார். இந்த அடையாளத்தை பொய்யாக்குவது, அதனை அலட்சியப்படுத்துவது எத்தகைய நேர்மையின்மை! அநீதி!

பிறகு அத்தகைய தெளிவான அடையாளங்களை மறுப்பது ஒருவர் தானே லேக்ராம் ஆவதல்லாமல் வேறென்ன? எனக்கு மிகவும் பரிதாபம் ஏற்படுகிறது. இறைவன் இந்நிலையில் எத்தகைய அருள் செய்துள்ளான்! ஒவ்வொரு சமுதாயம் சார்பாகவும் அடையாளங்களைக் காட்டினான். கம்பீரமானதும் மென்மையானதுமான எல்லா வகை அடையாளங்களும் காட்டப்பட்டன. அதனை ஒதுக்கித் தள்ளப்பட்டது போன்று தூக்கி எறிவது மிகப்பெரும் துர்பாக்கியமாகும். மேலும் அல்லாஹ்வின் கோபத்திற்கு காரணமாவதாகும். அல்லாஹ்வின் அடையாளங்களைப் பொருட்படுத்தாதவர் நினைவில் கொள்ளட்டும்! அல்லாஹ்வும் அவரை பொருட்படுத்த மாட்டான். இறைவன் புறமிருந்து வரும் அடையாளங்களை ஓர் அறிவுள்ளவர். இறை உணர்வுள்ளவர் அறிந்து கொள்கிறார்; அதிலிருந்து பயனடைந்து விடுகிறார். தொலைநோக்கு இல்லாதவர், இறைவனது பயத்தை கவனத்தில் கொண்டு ஆய்வு செய்யாதவர் இழப்பிற்குரியவராக இருந்து விடுகிறார். ஏனெனில் அவன் உலகத்தின் நிலை இவ்வாறு இருக்க வேண்டும் என்று விரும்பவில்லை. ஈமானுக்குள்ளேயே இருக்கும் ஈமானின் நிலை போன்று இருக்கவும் இல்லை. அவ்வாறு இறைவன் செய்யவில்லை. அவ்வாறு இருக்கும் என்றால் யூதர்கள் ஏன் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களை மறுத்திருக்கப் போகிறார்கள். மூஸா (அலை) அவர்கள் ஏன் மறுக்கப்பட்டார்கள்? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வளவு கஷ்டங்களை ஏன் சகிக்க நேர்ந்தது? ஈமானிலிருந்து மறைவான அம்சத்தை முற்றிலும் அகற்றிவிடத்தக்க ஓர் அடையாளதைக் காட்டுவது இறைவனது வழக்கமல்ல. ஓர் அறிவிலி, காட்டுமிராண்டி, அல்லாஹ்வின் நடைமுறையை

அறியாதவர் ஈமானின் மறைவான அம்சம் அகற்றப்படுவதையே அடையாளம் என்று நினைக்கிறார். இறைவன் அவ்வாறு ஒருபோதும் செய்வதில்லை.

நமது ஜமாஅத்திற்கு இறைவன் எந்தக் குறைவும் வைக்கவில்லை. எவரும் யாருக்கு முன்னாலும் வெட்கப்பட வேண்டியதில்லை. எவ்வளவு பேர் இந்த ஜமாஅத்தில் இருக்கிறார்களோ அவர்களுள் ஒருவர் கூட ஓர் அடையாளத்தைக் கூட பார்க்கவில்லை என்று கூற முடியாது. அக்காலத்திலும் சரி, இக்காலத்திலும் சரி, இப்போதும் கூட அடையாளங்களைக் கண்டே ஏற்கின்றனர். பிறப்பு அஹ்மதிகளை எடுத்துக் கொண்டால் அவர்கள் தனது மூதாதையர்களின் வரலாற்றைப் படிக்க வேண்டும். அதுபோன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடைய நூல்களைப் படிக்க வேண்டும். தம்மை இறைவனோடு தொடர்பை இணைக்க கவனம் செலுத்த வேண்டும்.

### *ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:*

பராஹீனே அஹ்மதிய்யாவைப் படியுங்கள். அதன் மீது சிந்தனை செய்யுங்கள். அக்காலத்தின் எல்லா செய்திகளும் அதில் உள்ளன. இக்காலதின் செய்திகளும் உள்ளன. நண்பர்கள் தொடர்பாகவும் எதிரிகள் தொடர்பாகவும் உள்ளன. இதெல்லாம் மனித ஆற்றலுக்குட்பட்டதா? இன்றிலிருந்து 30 வருடங்களுக்கு முன் இந்த இயக்கத்தின் பெயரும் அடையாளமும் இருந்ததில்லை. மேலும் நான் அதுவரை இருப்பேனா என்று என் வாழ்வு பற்றி கூட தெரியாத நிலையில் அத்தகைய மகத்தான செய்திகளைத் தந்து பிறகு அது நிறைவேறியும் உள்ளது. ஒன்றிரண்டல்ல; முழு பராஹீனே அஹ்மதிய்யாவும் அஹ்மதி வீடுகளிலும், கிறித்தவர்களிடமும், ஆரியர்களிடமும், அரசாங்கத்திடமும் உள்ளது.

இறைவனது பயமும், உண்மையின் தேடுதலும் இருப்பின் நான் கூறுகிறேன். பராஹீனே அஹ்மதிய்யாவின் அடையாளங்களை வைத்தே முடிவெடுங்கள். பாருங்கள்! அப்போது என்னை எவரும் அறியவில்லை. இங்கு எவரும் வந்ததும் இல்லை. ஒருவர் கூட என்னுடன் இருந்ததும் இல்லை. அப்போது இங்கிருக்கிற இந்த ஜமாஅத்தைப் பற்றி எனக்கு தெரிவித்தான். இந்த முன்னறிவிப்பு வெறும் யூகம், எண்ணம் எனில் இன்று இத்தனை பெரிய ஜமாஅத் ஏன்! காதியானுக்கு வெளியில் ஒருவர் கூட அறிந்திருக்காத ஒரு மனிதனைப் பற்றி பராஹீனே அஹ்மதிய்யாவில் கூறப்பட்டது. ஃபஹானா அத்துஆனா வதுரஃப பைனன்னாஸ். அதனால் உமக்கு உதவி செய்யவும், மக்களிடத்தில் நீர் பிரபல்யமடையவும் கூடிய நேரம் வந்து விட்டது.

இன்று, இந்தியாவில் அல்ல. இன்னும் சொல்வதாயின், அரபு நாடு, சிரியா, எகிப்து ஆகியவற்றிலிருந்து புறப்பட்டு ஐரோப்பா, அமெரிக்கா, ஆப்பிரிக்கா வரை நுழைந்து பிரபல்யம் அடைந்துள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன் ஒரு நிகழ்ச்சி காதியானிலிருந்து அரபு உலகத்திற்காக நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சி அரபு உலகில் ஒரு கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது.

### *ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:*

இது இறைவனது வார்த்தை இல்லையெனில், இறைவனது விருப்பத்திற்கு எதிரான ஓர் இட்டுக்கட்டுபவனின் திட்டம் எனில், இறைவன் அவருக்கு ஏன் உதவி செய்தான்? அவருக்காக அதற்கான ஆயத்தங்களையும், காரணிகளையும் ஏன் ஏற்படுத்தினான்? அதனை எல்லாம் நானா உருவாக்கினேன்? அல்லாஹ் ஒரு இட்டுக்கட்டுபவனுக்கு இவ்வாறு உதவி செய்வான் எனில், பிறகு நம்பிக்கையாளரின் உண்மைக்கான தகுதி தான் என்ன? நீங்களே அதற்கு பதில் சொல்லுங்கள். ரமலானில் சூரியனுக்கும் சந்திரனுக்கும் கிரகணம் பிடிக்க வைப்பது அந்த நேரத்தில் நான் அதனை செய்வது எனது சக்திக்கு உட்பட்டதா? ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அதனை உண்மையான மஹ்திக்கு அடையாளமாக்கி இருந்தார்கள். இறைவன் எனது வாதத்தின் வேளையில் உண்மைப்படுத்தினான். நான் அவனது தரப்பிலிருந்து வந்தவன் இல்லை எனில் இறைவன் தானே முழு உலகத்தையும் வழிகெடுத்தானா? இதற்கு யோசித்துப் பதில் சொல்லுங்கள். என்னை மறுப்பதன் தாக்கம் எதுவரை செல்கிறது? ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை மறுப்பதும் பிறகு இறைவனை மறுப்பதும் இதனால் ஏற்பட்டு விடுகிறது.

எத்தனை இறை அடையாளங்கள். இரண்டோ நான்கோ அல்ல. ஆயிரம் இலட்சம் வரை உள்ளன. எதனையெல்லாம் மறுத்துக் கொண்டு செல்வீர்கள். அதே பராஹீனில் இதுவும் எழுதப்பட்டுள்ளது.

يَأْتُوْنَ مِنْ كُلِّ فَجٍّ عَمِيْقٍ இப்போது நீங்களே வந்துள்ளீர்கள். நீங்கள் ஓர் அடையாளத்தை நிறைவேற்றியுள்ளீர்கள். நீங்கள் ஓர் அடையாளத்தை உங்களால் அழிக்க முடிந்தால் அழியுங்கள். பிறகும் கூறுகிறேன். இறை அடையாளத்தை மறுப்பது நல்லதல்ல. அதனால் இறைவனது கோபம் தூண்டப்படுகிறது. எனது உள்ளத்தில்

உள்ளதை நான் கூறி விட்டேன். ஏற்பதும் ஏற்காததும் உங்கள் விருப்பம். நான் உண்மையாளன் என்பதை இறைவன் நன்றாக அறிவான். நான் இறைவன் புறமிருந்து வந்தவன்.

இதன் கடைசி பத்தியில் அன்னார் கூறுகின்றார்கள். நீங்களே வந்து ஓர் அடையாளத்தை நிறைவேற்றியுள்ளீர்கள் என்று ஹுஸூர் கூறுகிறார்கள். அது ஒரு புதிதாக வந்த முஸ்லிமிடம் கூறுகிறார்கள். அவர் முஸ்லிமாகி இருந்தார். ஆனால் மேலும் அன்னாரிடம் அடையாளம் காட்டுமாறு கூறினார். அவருக்கு அன்னார் விவரமாக பதிய வைத்தார்கள். நீங்கள் நிறைவேறிய ஓர் அடையாளத்தைக் காட்டுமாறு கூறுகிறீர்கள். நீர் வந்ததே ஓர் அடையாளம் தான் என்று கூறினார்கள்.

இன்று நாம் பார்க்கிறோம். அல்லாஹ்வுடைய அருளால் ஒவ்வொரு நாட்டிலும் இந்த அடையாளம் நிறைவேறுகிறது.

பிறகு நோயிலிருந்து குணம் பெறும் அடையாளம் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: மாலிகோட்லாவைச் சேர்ந்த சர்தார் நவாப் முஹம்மதலி கான் சாஹிபுடைய மகன் அப்துர் ரஹீம் கான் கடும் காய்ச்சலால் அவதிப்பட்டார். மிகக் கடுமையான காய்ச்சலால் உயிரைக் காப்பாற்ற எந்த வழியும் தெரியாமல் இருந்தது. அவர் இறக்க வேண்டியவர் என்ற கட்டளையிடப்பட்டவர் போன்று இருந்தார். நான் அவருக்காக துஆ செய்தேன். அது தக்தீரே முபரம் (மாறாத இறை நியதி) போன்று தெரிய வந்தது. அப்போது நான் இறைவனது சன்னிதானத்தில் வேண்டுதல் விடுத்தேன். என் இறைவா! நான் இவனுக்காக பரிந்துரை செய்கிறேன். அதற்குப் பதிலாக இறைவன் கூறினான். مَنْ ذَاالَّذِیْ یَشْفَعُ عِنْدَهٗۤ اِلَّا بِاِذْنِهٖ இறை அனுமதியின்றி அவனிடம் யார் பரிந்துரை செய்ய முடியும்? நான் உடனே அமைதியாகி விட்டேன். பிறகு இடைவெளியின்றி உடனே இல்ஹாம் வந்தது. اِنَّكَ اَنْتَ الْمُجَازُ உமக்கு பரிந்துரை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நான் உடனே மிகவும் பணிவுடனும் உருக்கத்துடனும் துஆ செய்தேன். இறைவன் எனது துஆவை ஏற்றுக் கொண்டான். பையன் கபரிலிருந்து வெளி வந்தது போன்று ஆகிவிட்டான். ஆரோக்கியத்தின் அறிகுறி வெளிப்பட்டது. நீண்ட நாட்களுக்குப் பிறகு தனது அசல் உடல்நிலைக்கு திரும்பினான். சரியாகி விட்டான்.

இது எனது மகன் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்களைப் பற்றிய விஷயமாகும். அவருக்கு கண் நோய் இருந்தது. எந்த மருந்தும் பலன் தர இயலவில்லை. பார்வையே போய் விடும் நிலை ஏற்பட்டு விட்டது. நோய் முற்றிய நிலைக்கு வந்த போது நான் துஆ செய்தேன். بَرَّقَ طِفْلِیْ بَشِیْرٌ எனது மகன் பஷீர் பார்க்கத் தொடங்கி விட்டான். அதே நாளில் அல்லது மறுநாளில் குணமாகி விட்டான். இந்த சம்பவமும் சுமார் 100 பேருக்கு தெரியும்.

***பிறகு எதிரிகள் அழிந்தது பற்றிய அடையாளம் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

71வது அடையாளமாக ஷிர்ருல் கிலாஃபா என்ற நூலில் 62வது பக்கத்தில் நான் எழுதியுள்ளேன். எதிரிகளின் மீதும் பிளேக் நோயின் அடையாளம் ஏற்படுமாறு நான் துஆ செய்திருந்தேன். அதாவது எந்த எதிரியின் பங்கில் நேர்வழி கிடைப்பது சாத்தியமில்லையோ அத்தகைய எதிரிகளின் மீது பிளேக் வர வேண்டும் எனறு கேட்டேன். எனவே இந்த நாட்டில் இந்த துஆவிற்கு பல வருடங்களுக்குப் பிறகு பிளேக் நோயின் ஆதிக்கம் தொடங்கியது. பல கடுமையான எதிரிகள் அதனால் உலகை விட்டுச் சென்றனர். அந்த துஆ இதுவாகும்.

وخذرب من عادی الصلاح و مفسدًا     و نزّل علیه الرجز حقًا و دمّر

என் இறைவா! எந்த மனிதன் நேர்வழி மற்றும் நல்ல பணிகளின் எதிரியோ குழப்பம் விளைவிக்கிறாரோ அவரைப் பிடிப்பாயாக! அவருக்கு பிளேக் நோய் தண்டனை அளித்து அழித்து விடுவாயாக!

و فرج کروبی یا کریمی و نجّنی     ومزّق خصیمی یا الٰهی و عفّر

இறைவா! எனது நிம்மதியின்மையை அகற்றுவாயாக! எனது கவலைகளிலிருந்து ஈடேற்றம் வழங்குவாயாக! எனது கண்ணியத்திற்குரியவனே! எனது எதிரிகளைத் துண்டு துண்டாக்கி மண்ணில் கலந்து விடு!

இந்த முன்னறிவிப்பு நாட்டின் எந்தப் பகுதியிலும் பிளேக்கின் எந்த அறிகுறியும் இல்லாத நேரத்தில் செய்யப்பட்டதாகும்.

***பிறகு இஜாஸ் அஹ்மதி என்ற நூலில் முன்னறிவிப்பு இருந்தது.***

اذا ما غضبنا غاضب الله صائلًا    علٰی معتدٍ یؤذی و بالسّوء یجهر

இறைவன் கோபப்படும் போது, வரம்பு மீறுகின்றவன் மற்றும் வெளிப்படையாக தீமையின் பக்கம் செல்லக்கூடியவனை அழித்து விடுகிறான்.

ویاتی زمان کاسرٌ کُلّ ظالم    وهل یهلکنّ الیوم الا المدمّرُ

ஒவ்வொரு அநீதியிழைப்பவனையும் முறித்து விடும் காலம் வரவிருக்கிறது. எவர்கள் தமது பாவத்தின் காரணமாக அழிந்து விட்டார்களோ அவர்களே அழிவர்.

وانّی لشرّ النّاس ان لم یکن لهم    جزاء اهانتهم صغارٌ یصغّرُ

நான் மோசமான மக்களை விட மோசமானவனாக இருப்பேன். அவர்களின் இழிவுக்கு தண்டடை இழிவு ஆகும்.

قضی اللّٰه انّ الطعن بالطعن بیننا    فذالک طاعون اتاهم لیبصروا

இறைவன் முடிவு செய்து விட்டான். பழித்துரைப்பது பழித்துரைப்பதன் மூலமே பழிவாங்கப்படும். இதே பிளேக் இவர்களைப் பிடிக்கும்.

ولمّا طغی الفسق المبید بسیله    تمنّیت لو کان الوباء المتبّرُ

குழப்பம் விளைவிப்பவன் வரம்பு மீறிய போது, நான் இப்போது அழிக்கக்கூடிய பிளேக் வேண்டும் என்று விரும்பினேன்.

பிறகு எனக்கு பார்ஸியில், 'நீ எதிரிகளின் வீட்டை பாழாக்கி விட்டாய்' இல்ஹாம் வந்தது. இது அல்ஹகம், அல் பத்ரில் வெளியிடப்பட்டது. மேற்கண்ட துஆ கடும் தொந்தரவுக்குப் பிறகு செய்யப்பட்டது. அது இறை சன்னிதியில் ஒப்புக் கொள்ளப்பட்டது. அதனால் பிளேக் நோயின் தண்டனை அவர்கள் மீது நெருப்பு போன்று வருஷிக்கப்பட்டது. எனது ஆயிரக்கணக்கான எதிரிகள், என்னை பொய்ப்படுத்தியவர்கள், தீயவனாக என்னை குறிப்பிட்டவர்கள் அழிந்தனர்.

இப்போது உதாரணமாக, சில எதிரிகளின் பெயர்களை எடுத்து வைக்கிறேன். முதலில் ரசூல் பாபா. அமிர்தசரஸைச் சேர்ந்தவர். இவர் குறிப்பிடத்தக்கவர். இவர் என்னை மறுத்து நூல் எழுதினான். கடும் வார்த்தைகளைப் பயன்படுத்தினார். சொற்ப நாட்களின் வாழ்வு கொண்ட இவ்வுலகின் மீது நேசம் கொண்டு பொய் கூறினார். கடைசியில் இறைவனது வாக்குறுதிக்கேற்ப பிளேக் நோயால் இறந்தார்.

பிறகு முஹம்மது பகிஸ் என்பவர். இவர் டெபுடி இன்ஸ்பெக்டராக பாட்டாலாவிற்கு வந்திருந்தார். இவர் தொல்லை கொடுப்பதிலும், பகைமை காட்டுவதிலும் தீவிரமாக இருந்தார். இவரும் பிளேக் நோயால் இறந்தார். அதன் பிறகு ஜுராக் தீன் என்ற பெயர் கொண்ட ஜம்முவைச் சேர்ந்த ஒருவர் எழுந்தார். இவர் தாம் ரஸூல் ஆக இருப்பதாக வாதம் செய்தார். எனக்கு தஜ்ஜால் என்று பெயர் வைத்தார். ஹஸ்ரத் ஈஸா கனவில் எனக்கு ஒரு தடியை தந்துள்ளார்கள். அந்த ஈஸாவின் தடியைக் கொண்டு இந்த தஜ்ஜாலை அழிப்பதற்காக என்று கூறினான். அவரும் எனது முன்னறிவிப்பிற்கேற்ப குறிப்பாக இவருக்காகவே கூறப்பட்ட முன்னறிவிப்பு இதழ் தாஃபிஉல் பலா வ மயார் அஹ்லுல் அஸ்ஃபியா அஸ்தஃபாவில் உள்ளது. அது அவரது வாழ்நாளிலேயே வெளியிடப்பட்டது. அதற்கேற்ப **4** ஏப்ரல் **1906 –**ல் தனது இரு மகன்களுடன் தானும் அழிந்து விட்டார். ஈஸா உடைய தடி எங்கே போனது**?** என்னை அழிப்பதற்காக அது தரப்பட்டிருந்ததே**?** இன்னீ லமினல் முர்ஸலீன் என்ற அவரது இல்ஹாம் எங்கே போனது**?** பரிதாபம்! பெரும்பாலார் தமது உள்ளத்தை தூய்மைப்படுத்துவதற்கு முன்பே, நஃப்ஸ் கொடுக்கிற செய்தியை இல்ஹாம் என்று நினைத்து விடுகின்றனர். அதாவது நஃப்ஸை தூய்மைப்படுத்தும் முன்னரே நாம் மிகவும் தூய்மையாகி விட்டோம் என்று நினைத்து விடுகின்றனர். நஃப்ஸின் விருப்பங்களை இல்ஹாம் என்று நினைத்து விடுகின்றனர்.

கூறினார்கள்: எனவே இறுதியில் இழிவுடன் அவர்களது மரணம் வருகிறது. இவர் தவிர இன்னும் பலர் ஏளனம் செய்தல், இழிவுபடுத்துவதில் எல்லை மீறினர். இறைவனது பிடிக்கு பயப்படவில்லை. பகலும், இரவும், எள்ளி நகையாடலும் ஏச்சுப் பேச்சுக்களுமே இவர்களது வேலையாக இருந்தது. கடைசியில் பிளேக்கிற்கு இரையாகினர்.

உதாரணமாக, லாஹூரைச் சேர்ந்த முன்ஷி மஹ்பூப் ஆலிம் சாஹிப் அஹ்மதி எழுதுகிறார்: எனது சச்சா ஒருவர் இருந்தார். அவரது பெயர் நூர் அஹ்மது. அவர் மோஸா கடிசட்டா, ஹாபிஸாபாத் வட்டத்தைச் சேர்ந்தவர்.

ஒருநாள் அவர் என்னிடம் கேட்டார். மிர்ஸா சாஹிப் தமது மஹ்தி என்ற வாதத்திற்கு ஏன் அடையாளங்கள் காட்டுவதில்லை. மஹ்பூப் ஆலம் சாஹிப் கூறுவதாக மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள். நான் அவரிடம் கூறினேன். அன்னாரது அடையாளங்களுள் ஓர் அடையாளம் பிளேக் நோயாகும். முன்னறிவிப்பு செய்யப்பட்ட பிறகு வந்துள்ளது. அது உலகை விழுங்கிக் கொண்டிருக்கிறது. உடனே அவர், பிளேக் நோய் என்னைத் தீண்டாது. மாறாக, மிர்ஸா சாஹிபை அழிக்கவே இந்த பிளேக் நோய் வந்துள்ளது. எங்கள் மீது அதன் தாக்கம் ஒருபோதும் ஏற்படாது. மிர்ஸா சாஹிப் மீதே ஏற்படும் என்று கூறினார். இவ்வாறு உரையாடல் நடந்த பிறகு பேச்சு முடிந்தது.

முன்ஷி மஹ்பூப் ஆலம் சாஹிப் கூறுகிறார்: நான் லாஹூர் சென்றடைந்து ஒரு வாரத்திற்குப் பிறகு எனக்கு செய்தி வந்தது. எனது சச்சா நூர் அஹ்மது பிளேக் நோயால் இறந்தார். அந்த ஊரின் பெரும்பாலார் இந்த உரையாடலுக்கு சாட்சியாக இருந்தனர். இது மறைக்கவே முடியாத சம்பவமாக இருந்தது.

பிறகு மியான் மிஃராஜுத்தீன் சாஹிப் லாஹூரிலிருந்து எழுதுவதாக அன்னார் கூறுகின்றார்கள்: மவ்லவி ஜெய்னுல் ஆபிதீன் மவ்லவி பாஸில் முன்ஷிஃபாஸில் தேர்வில் தேர்ச்சி பெற்றார். மவ்லவி குலாம் ரஸூல் கில்லாவின் உறவினர் ஆவார். அஞ்சுமன் ஹிமாயத்தே இஸ்லாம் லாஹூருடைய ஆசிரியாக இருந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய உண்மையைப் பற்றி அவர் முஹம்மது அலி ஸியால்கோட்டியுடன் காஷ்மீர் கடைவீதியில் ஒரு கடை முன் நின்று முபாஹலா செய்தார். சிறிது நாட்களுக்குப் பிறகு பிளேக் நோயால் இறந்தார். அவர் மட்டுமல்ல. அவரது மனைவியும் பிளேக் நோயால் இறந்தார். அவரது மருமகன் அக்கவுண்டன்ட் ஜெனரல் வேலை பார்த்தவர். அவரும் பிளேக் நோயால் இறந்தார். இவ்வாறு அவரது வீட்டிலிருந்த 17 பேர் முபாஹலாவுக்குப் பிறகு பிளேக் நோயால் இறந்தனர். இது வியத்தகு விஷயமாகும்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

இது வியத்தகு விஷயமாகும். யாராவது இந்த இரகசியத்தைப் புரிய முடிகிறதா? மக்களின் எண்ணத்தின்படி நான் பொய்யனாகவும் இட்டுக் கட்டுபவனாகவும் தஜ்ஜாலாகவும் உள்ளேன். ஆனால் முபாஹலாவின் போது அம்மக்களே மரிக்கின்றனர். நவூதுபில்லாஹ். அல்லாஹ்வும் தவறாகப் புரிந்து விட்டானா? அத்தகைய மக்கள் மீது ஏன் இறைவனின் பிடி இறங்கியது? மரணமும் வருகிறது. இழிவும் அவமானமும் வருகிறது.

***கூறுகின்றார்கள்:*** மியான் மிஃராஜுத்தீன் எழுதுகிறார். கரீம் பக்ஷ் என்ற பெயர் கொண்ட ஒரு குத்தகைதாரர் லாஹூரில் இருந்தார். ஹுஸூரைப் பற்றி மரியாதையில்லாத கடும் வார்த்தைகளைப் பேசினார். அவ்வாறு பலமுறை செய்து வந்தார். பலமுறை நான் அவருக்கு புரிய வைத்தேன். ஆனால் திரும்பவில்லை. பிறகு வாலிப வயதிலேயே மரணத்திற்கு இரையானார்.

***பிறகு கூறினார்கள்:*** செய்யது அஹ்மது ஷா சாஹிப் ஸியால்கோட்டி எழுதுகிறார். ஹாபிஸ் சுல்தான் ஸியால்கோட்டி ஹுஸூருடைய கடும் எதிரியாக இருந்தார். ஸியால்கோட்டில் அன்னாரின் வாகனம் செல்லும் போது சாம்பலைப் போட வேண்டும் என்று நினைத்திருந்தவரும் அவர் தான். அவரும் அதே 1906 –ல் பிளேக் நோயால் மரணித்தார். அவரது வீட்டில் 9–10 பேர் பிளேக்கால் மரணித்தனர். அதே போன்று ஸியால்கோட் நகரில் எல்லாருக்கும் தெரிந்த மனிதர் ஹகிம் முஹம்மது அலி பைஅத் செய்த பிறகு முர்தத் ஆனவர். இவர் மத்ரஸத்துல் குர்ஆனுக்கு அடிக்கல் நாட்டினார். கடும் எதிரியாக இருந்தார். தனது மன விருப்பத்தால் சுயநோக்கத்தால் துரதிருஷ்டவசமாக பைஅத்தில் நிலைத்திருக்க முடியவில்லை. ஸியால்கோட்டிலுள்ள முஹல்லா லுவாராவின் மக்கள் கடும் எதிரிகளாக இருந்தனர். பகைமையிலும் எதிர்ப்பிலும் அவர்களுடன் இணைந்து விட்டார். பிறகு அவரும் பிளேக் நோயிற்கு இரையானார். மனைவி, தாய், சகோதரர் எல்லாரும் ஒருவருக்குப் பின் ஒருவராக பிளேக்கிற்கு இரையாயினர். அவரது மத்ரஸாவுக்கு உதவித் தொகை வழங்கியவர்களும் அழிந்தனர்.

பிறகு கூறினார்கள்: அதேபோன்று மிர்ஸா சர்தார் பேக் எல்லை மீறினார். எப்போதும் எள்ளிநகையாடலும், பழித்துரைப்பதும் அவரது வேலையாக இருந்தது. அவரும் பிளேக் நோயால் பீடிக்கப்பட்டார். ஒருமுறை அவர் ஜமாஅத்தின் ஒரு நபரிடம் இறுமாப்புடன் கூறினார். ஏன் பிளேக் பிளேக் என்று கூறுகிறீர்கள்? நமக்கு பிளேக் வந்தால் தான் நமக்கு புரியும். இதற்கு இரண்டு நாட்களுக்குப் பிறகு அவர் பிளேக்கால் இறந்தார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய அழிந்துவிட்ட மகத்துவத்தை மீண்டும் நிலைநாட்டவே அனுப்பப்பட்டுள்ளேன். மேலும் திருக்குர்ஆனின் உண்மையை உலகிற்கு காட்டவும் அனுப்பப்பட்டுள்ளேன். இவை அனைத்தும் நடக்கின்றன. ஆனால் எவரது கண்கள் கட்டப்பட்டுள்ளனவோ

அவர் அதனைக் காண முடியாது. மாறாக இந்த இயக்கம் இப்போது சூரியனைப் போன்று ஒளிவீசத் தொடங்கி விட்டது. அதன் அடையாளங்களுக்கு எவ்வளவு மக்கள் சாட்சிகள் என்றால் அதனை ஓரிடத்தில் ஒன்றுகுவித்தால் அதன் எண்ணிக்கை எந்த அளவுக்கு இருக்கும் எனில் இந்த பூமியில் எந்த அரசனுக்கும் அவ்வளவு எண்ணிக்கையில் படைவீரர் இல்லை.

பிறகு அன்னார் கூறினார்கள்: இறைவன் என்னை சீர்திருத்தம் செய்வதற்காக நியமித்து அனுப்பினான். எனது கையின் மூலம் அடையாளங்கள் வெளிப்பட வேண்டும். அவற்றின் மூலம் பாரபட்ச சிந்தனையிலிருந்து விலகியுள்ள தூய்மையான உள்ளங்களைக் கொண்ட இறை பயமுள்ள பகுத்தறிவின் முழுமையைப் பயன்படுத்துபவர்களாகிய மக்கள் இஸ்லாத்தை நன்றாக அறிந்து கொள்ள வேண்டும். அடையாளம் ஒன்றிரண்டல்ல. ஆயிரக்கணக்கான அடையாளங்கள் உள்ளன. அவற்றுள் சிலவற்றை நமது ஹகீகத்துல் வஹியில் எழுதிவிட்டேன். 13வது நூற்றாண்டு முடிந்து 14வது நூற்றாண்டின் தொடக்கத்தில் இறைவன் என்னை நியமித்து அனுப்பினான். ஆதமிலிருந்து எத்தனை நபிமார்கள் சென்று போனார்களோ அவர்கள் அனைவரின் பெயரையும் எனக்கு வைத்தான். அவற்றுள் கடைசி பெயர் ஈஸா மவ்வூது மற்றும் அஹ்மது முஹம்மது மஹ்ஹீது என்று வைத்தான். இந்த பெயர்களையும் சேர்த்து என்னை மீண்டும் மீண்டும் அழைத்தான். இரு பெயர்களையும் வேறு வார்த்தைகளில் மஸீஹ் – மஹ்தி என்று கூறப்பட்டுள்ளன. அற்புதங்களாக தரப்பட்டவற்றுள் சில முன்னறிவிப்புகளாக உள்ளன. அவை பெரும் பெரும் மறைவான செய்திகளை உள்ளடக்கியவை. இறைவனது அதிகாரத்தை தவிர வல்லமையைத் தவிர வேறு எதன் மூலமும் யாராலும் கூற முடியாதவை. சில துஆக்களாக இருந்தன. அவை ஒப்புக் கொள்ளப்பட்டு அறிவிக்கப்பட்டவை. சில ஃபத்வாக்கள். அதன் மூலம் கடுமையான எதிரிகள் அழிக்கப்பட்டனர். சில துஆக்கள் நோய்க்கு குணம் அளிப்பவையாக இருந்தன. அவற்றின் தகுதி துஆவை விட பெரியதாகும். சில முபாஹலாக்களாக இருந்தன. அதன் விளைவாக இறைவன் பல எதிரிகளை அழித்தான். இழிவுபடுத்தினான். சில ஸாலிஹீன்களின் சாட்சிகள் அவர்கள் இறைவனிடமிருந்து இல்ஹாம் பெற்று எனது உண்மைக்கு சாட்சி அளித்தனர். இன்னும் சில ஸாலிஹீன்களின் சாட்சிகள். அவர்களோ நான் பிறகும் முன்பே வஃபாத் ஆகியிருந்தனர். அவர்கள் எனது பெயரையும் எனது ஊரின் பெயரையும் கூறி சாட்சி பகர்ந்து விட்டுச் சென்றனர். அவரே மஸீஹ் மவ்வூது விரைவில் வர உள்ளார் என்று கூறி இருந்தனர்.

சிலர் நான் பிறப்பதற்கு முன்பே என்னைப் பற்றி கூறியிருந்தனர். சிலர் எனது தோற்றத்திற்கு முன் எனது வயது ஒருவேளை 10–12 ஆக இருக்கும் போது என்னைப் பற்றி குறிப்பிட்டுச் சென்றனர். சில முரிதுகளிடம் நீங்கள் அவரைப் பார்க்கும் அளவுக்கு வயதை பெறுவீர் என்று கூறிச் சென்றனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் என்னென்ன அடையாளங்களையெல்லாம் கூறினார்களோ உதாரணமாக, ரமலானில் சந்திர சூரிய கிரகணங்கள் ஏற்படுதல், நாட்டில் பிளேக் நோய் பரவுதல் ஆகியவை எனக்கு சாட்சியாக தோன்றி விட்டன. இப்போது 14வது நூற்றாண்டின் கால் பகுதியை ஏற்கனவே அடைந்து விட்டேன். எனக்கு ஆதரவாக வந்த எல்லா சாட்சிகளையும் ஆதாரங்களையும் எழுதினால் ஆயிரம் தொகுதிகளிலும் அடங்காது.

இது சஷ்மயே மஃரிஃபத்திலுள்ள மேற்கோளாகும். இதற்கு முந்தைய மேற்கோள் ஹகீகத்துல் வஹியில் உள்ளதாகும். இந்த மேற்கோள்களில் எதிரிகளின் முடிவுகள் கூறப்பட்டிருந்தன. பிறகு அந்த அடையாளம் நிறைவேறக் காரணமாகி தமது தீய முடிவை எய்தினர். உலகை விட்டு விடை பெற்றனர். சிலவற்றில் துஆ ஏற்றுக் கொள்ளப்பட்ட அடையாளங்கள் பற்றி கூறப்பட்டது.

இப்போது நான் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டது தொடர்பான சில சம்பவங்களை எடுத்து வைக்கிறேன். எவ்வாறு அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது காலத்தில் மக்களுக்கு வழிகாட்டினான் என்பது சம்பந்தமாக எடுத்து வைக்கிறேன்.

***ஹஸ்ரத் ஷேக் முஹம்மது அப்ஸல் சாஹிப் கூறுகின்றார்கள்:***

அப்போது எளியவனின் வயது 12 ஆக இருந்தது. எனது குடும்பத்தில் பெரிய தந்தை ஹகீக் ஷேக் இபாதில்லாஹ் சாஹிப், பெரிய தந்தையின் மகனாகிய சகோதரர் ஷேக் கரம் இலாஹி சாஹிப் ஆகியோர் ஹஸ்ரத் சாஹிபிடம் பைஅத் செய்திருந்தாலும் இந்த தொண்டன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அப்போது பார்த்திருக்கவும் இல்லை. ஹுஸூருடைய புகைப்படத்தை பார்த்திருக்கவும் இல்லை. கனவு கண்டேன். எனது உடலிலிருந்து உயிர் முழுவதும் போய் விட்டது. ஆனால் மூளையில் புரிவதற்கும், கண்களில் காண்பதற்கும் மட்டும் ஆற்றல் எஞ்சியிருந்தது. எனக்கு முன் ஒரு பெரியவர் அமர்ந்துள்ளார். அவருக்கு பின்னால் அருளுக்குரிய இரண்டு

பாதங்கள் தெரிகின்றன. எனது உள்ளத்தில் போடப்படுகிறது. என் முன் அமர்ந்து என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறவர் ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் ஆவார். பின்னால் தெரிகிற அருளுக்குரிய பாதம் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களுடையது. எனது கண்கள் திறந்தன. நான் காலையில் அப்துல்லாஹ் கான் சாஹிபுடைய மகனாகிய முர்தஸா கான் சாஹிப் என்ற இப்போது லாஹூரி ஜமாஅத்திலுள்ள மனிதரிடம் விளக்கம் கேட்டேன். உமக்கு மிர்ஸா சாஹிப் மூலம் ஹஸ்ரத் ரஸூலே கரீம் முஹம்மது (ஸல்) அவர்களின் பின்தொடர்தல் கிடைக்கும் என்று கூறினார். அவ்வாறே நடந்தது. நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். 1905 –ல் நான் பைஅத் செய்த போது கனவில் என்னைப் பார்த்துக் கொண்டிருந்த அந்த பெரியவர் தான் ஹுஸூராக இருந்தார்கள். இவ்வாறு இறைவன் தான் விரும்புபவருக்கு உண்மையான வழியைக் காட்டுகிறான்.

***பிறகு ஹஸ்ரத் நிஸாமுத்தீன் கூறுகிறார்கள்:***

நான் பைஅத்தில் அப்போது இணையவில்லை. அஸர் தொழுகையை மஸ்ஜித் முபாரக்கில் தொழுது விட்டு பழைய ஏணிப்படிகளின் வழியாக கீழிறங்கினேன். அப்போது முன்கூடத்தில் ஓர் அறை இருந்தது. இரு கண்ணியத்திற்குரிய வெள்ளை நிற ஆடையுடன் தோற்றமுற்றவர்களைச் சந்தித்தேன். என்னிடம், மிர்ஸா சாஹிப் எங்கு இருக்கிறார் என்று தயவுசெய்து கூறுங்கள் என்கின்றனர். நாங்கள் மிகவும் தூரத்திலிருந்து பயணம் செய்து இங்கு வந்துள்ளோம். நான் வாருங்கள் என்று கூறுகிறேன். அவர்கள் கூறினர். வேண்டாம். நீரும் பின்னால் வாரும். அவர் மேலே இருக்கிறார் எனில் நாங்களே கண்டு கொள்வோம். நான் அவர்கள் பின்னாலேயே சென்றேன். எனக்கு முன் அவர் ஏணிப்படியை ஏறிச் சென்று விட்டனர். ஹுஸூர் அவர்களின் சபை கூடியிருந்தது. ஹுஸூர் அவர்கள் தலைப்பாகையை கழற்றி விட்டு சகஜமாக அமர்ந்திருந்தார்கள். மக்கள் அவர்களைச் சுற்றி அமர்ந்திருந்தனர். அன்னார் முன் சென்று கொண்டிருக்கும் போதே ஒருவர் அன்னாரிடம் உங்கள் பெயர் குலாம் அஹ்மதா? என்று கேட்க, அன்னார் ஆம்! என்றார்கள். பிறகு அவர், உங்கள் வாதம் மஸீஹ் மவ்வூது என்பதா? என்று கேட்டார். ஹுஸூர் ஆம் என்றார்கள்.

பிறகு அவர் கூறினார்: முதலில் உங்களுக்கு ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் ஸலாத்தை தெரிவிக்கிறேன். பிறகு எனது தரப்பிலிருந்து ஸலாத்தைக் கூறுகிறேன். நான் இன்ன நாட்களில் அவர்களது சமூகத்தில் இருந்தேன். அப்போது அல்லாஹ்வின் தூதரின் கை ஹுஸூர் (அலை) அவர்களுடைய வலது தோளின் மீது இருந்தது. நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்: ஹாஸா மஸீஹின். இவரிடம் பைஅத் செய்யுங்கள். எனது ஸலாமை கூறி விடுங்கள். அவர் தன் கனவில் கண்டதை கூறுகிறார். இவ்வாறு நான் பார்க்கிறேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய கை மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய தோளில் இருந்தது. இவர் மஸீஹ் ஆவார் என்று கூறுகிறார்கள். ஸலாம் கூறுங்கள் என்று கூறினார்கள். அதனால் அவர்களது ஸலாத்தை தங்களிடம் கொண்டு சேர்த்தேன் என்று கூறினார். பிறகு அவர் பைஅத் செய்தார்.

***ஹஸ்ரத் ஹக்கீம் அதா முஹம்மது சாஹிப் கூறுகிறார்கள்:***

பைஅத்திற்குப் பிறகு சில நாட்கள் காதியானில் இருந்தேன். பிறகு ஹுஸூரிடம் அனுமதி வாங்கி லாஹூர் வந்தேன். சூபி அஹ்மது தீன் சாஹிப் டோரிபாவ் அவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்திலுள்ள ஒருவரை சந்திக்க வைத்தார். சில நாட்களுக்குப் பிறகு ஒரு சாஹிப் அன்புடன் கூறினார். மீண்டும் முஹம்மது சாஹிப் காதியான் வந்துள்ளார்கள். இதனைக் கேட்டு எனக்கு வியப்பு ஏற்பட்டது. துஆ செய்தேன். அல்லாஹ்வே! இந்த ஜமாஅத்தின் கொள்கை முஹம்மது (ஸல்) திரும்ப வந்துள்ளார்கள் என்பதாகும். ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் எவ்வாறு முஹம்மது ஆக முடியும்? நான் கனவில் பார்த்தேன். ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நிற்கிறார்கள். வானத்திலிருந்து ஒரு மலக்கு இறங்கி என்னிடம் கேட்டார். இவர் யார்? நான் இவர் மிர்ஸா சாஹிப் என்றேன். பிறகு நான் பார்க்கிறேன். வானத்திலிருந்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய ஒளி இறங்கியது. அந்த ஒளி மஸீஹ் மவ்வூதின் மூளையில் இறங்கியது. பிறகு அது முழு உடலும் பரவியது. ஹுஸூர் உடைய முகம் ஒளியால் நிறைந்தது. பிறகு அந்த மலக்கு கேட்டார். இவர் யார்? நான், கூறினேன். முதலில் இவர மிர்ஸா சாஹிபாக இருந்தார். இப்போது முஹம்மது (ஸல்) அவர்களாகவே ஆகி விட்டார். இவையெல்லாம் பழைய சம்பவங்கள். மக்கள் எவ்வாறு கனவு கண்டு பைஅத் செய்தார்கள் என்று விளக்குகிறது.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

அல்லாஹ்விடமிருந்து வழிகாட்டலகள் மற்றும் அடையாளங்களின் தொடர் தொடரும். இந்த இயக்கம் முழுமையை அடையும் வரை தொடரும். ஆகவே அவர்களின் இந்த முன்னறிவிப்பு இன்று வரை எத்தனை மகிமையுடன் நிறைவேறுகிறது. அல்லாஹ் எவ்வாறு அடையாளங்களைக் காட்டுகிறான். ஆயிரக்கணக்கான மைல் தூரத்தில் இருப்பவர்கள் கூட அல்லாஹ் அவர்களுக்கு எவ்வாறு வழிகாட்டினான் என்பதற்கு சாட்சி பகர்கின்றனர். அவற்றுள் சில சம்பவங்களை எடுத்து வைக்கின்றேன்.

மாலி பகுதியைச் சேர்ந்த பாலாவில் ஜானி பிரிவைச் சேர்ந்த இமாம் இருந்தார். அவரது தந்தையார் மூலமாக அங்கு 93 கிராமங்கள் முஸ்லிம் ஆயினர். தந்தையாருக்குப் பிறகு இவர் அவரது இடத்திற்கு வந்தார். சில காலத்திற்கு முன் அவருக்கு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. ஆதம் சாஹிப் கூறுகிறார்: அவர் கனவில் கண்டார். ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவரது வீட்டில் அவரது அறைக்குள் வந்துள்ளார்கள். அவர் ஹுஸூருடன் அறையில் இருக்கிறார். வெளியே நிறைய உலமாக்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை எதிர்பார்த்திருக்கிறார்கள். அவர் கூறுகிறார்: நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம், வெளியில் உலமாக்கள் உங்களை எதிர்பார்த்திருக்கின்றனர் என்று கூறுகிறேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வெளியில் வந்து, அந்த எல்லா உலமாக்களின் தலையிலிருந்தும் தொப்பியை கழற்றி விட்டு நமது முஅல்லிமீன்களுடன் அவரது முரீதுகள் இருந்த எல்லா கிராமங்களுக்கும் செல்கிறார். அல்லாஹ்வுடைய அருளால் இதுவரை 40 ஐ விட அதிகமான கிராமங்கள் அஹ்மதிய்யத்தை ஏற்று விட்டனர்.

பிறகு புர்கினோஃபாஸோ உடைய ஜியாரா புகாரி சாஹிப் நமது ரேடியோ நிலையத்திற்கு தொலைபேசியில் அழைத்தார். அங்கு நமது பல்வேறு ரேடியோ நிலையங்கள் பணி செய்கின்றன. நான் அவரது தப்லீகை கேட்டேன். அவரிடம் கூறப்பட்டது. நீங்கள் பார்க்க வேண்டியதாவது, வரவேண்டிய இமாம் மஹ்தி இவரா? இல்லையா? என்பது தான். இதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களே ஒரு வழியை சொல்லித் தந்துள்ளார்கள். அதற்காக இஸ்திகாரா செய்யுங்கள். நான் அந்த நாளிலிருந்தே இஸ்திகாராவை தொடங்கினேன். இஸ்திகாரா செய்தவாறு ஒருவாரம் தான் கழிந்திருக்கும். கனவில் ஒரு கூடாரத்தின் கீழ் இரு ஒளிமிக்க மனிதர்களைப் பார்க்கிறார். கனவிலேயே அவரது நண்பர் கூறுகிறார்: வலது புறம் இருப்பவர் இமாம் மஹ்தி. இன்னொருவரை தெரியவில்லை. அதன் மூலம் வர வேண்டிய இமாம் மஹ்தி உண்மையாளர் இவர் தான். நவூதுபில்லாஹ் இவர் பொய்யராக இருந்தால் எனது இஸ்திகாராவிற்குப் பதிலாக எனது கனவில் எப்படி வர முடியும்? இவ்வாறு நான் பைஅத் செய்து விட்டேன் என்கிறார்.

***பிறகு எகிப்திலிருந்து ஒரு பெண்மணி எழுதுகிறார்:***

எனக்கு அவர் எழுதினார். இறைவன் எனக்கு சில சிறப்புகளை வழங்கினான். இந்த வகையில் நான் கனவில் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் காதியானி (அலை) அவர்கள் மற்றும் தாங்களையும் பார்த்தேன். இறைவன் மீது ஆணை! அப்போது எனக்கு உலகில் ஒரு கலீஃபா இருக்கிறார் என்று தெரியாது. நான் இஸ்திகாரா மட்டும் செய்து கொண்டிருந்தேன். இறைவன் எனக்கு இரு பெரியவர்களையும் காட்டி விட்டான். எனினும், ஷய்த்தான் என்னை ஏமாற்றினான். ஆனால் இறைவனுக்கு நன்றி அவன் எனக்கு ஹக்கை ஒப்புக்கொள்ள வாய்ப்பளித்தான். ஷய்த்தானின் சூழ்ச்சியில் இருந்து வெளியில் வந்தேன். எனது நிலைத்து நிற்றலுக்கும், மன்னிப்பிற்கும் துஆ செய்யுங்கள்.

அல்லாஹ் அவருக்கு உறுதியான நிலைநிற்றலை வழங்குவானாக!

பிறகு மொராக்கோ உடைய பெண்மணி ஆமீ சாஹிபா கூறுகிறார்: லிகாமல் அரப் மூலமாக அறிமுகம் ஏற்பட்டது. ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் உடைய பேச்சு ஆதாரப்பூர்வமாகவும் மன நிறைவு தருவதாகவும் இருந்தது. அதன் பிறகும் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் இறைவனிடம் இஸ்திகாரா செய்யுமாறும் துஆ செய்யுமாறும் கவனமூட்டிக் கொண்டேயிருப்பார்கள். இந்த வகையில் இஸ்திகாராவைத் தொடங்கினேன். கனவில் பார்த்தேன். ஒரு பரந்த வெளியில் ஒரு நீண்ட கூடாரம் அமைக்கப்பட்டிருந்தது. அதில் மிகவும் கவலையுடன் கூடிய ஒரு மனிதர் இருந்தார். இந்நிலையில் ஒரு மனிதர் அவரிடம் வந்து கேட்கிறார். உங்களுக்கு இவ்வளவு துக்கம் ஏன்?

அவர் கூறுகிறார்: நான் மஸீஹ் மவ்வூது ஆவேன். மக்களை நேர்வழியின் பக்கம் அழைக்கிறேன். ஆனால் மக்கள் என்னை உண்மைப்படுத்தவில்லை. கேள்வி கேட்டவர் கூறுகிறார்: நான் உம்மை உண்மைப்படுத்துகிறேன்.

நான் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் ஆவேன். இந்தக் கனவு கண்ட பிறகு என்ன நடந்தாலும் பரவாயில்லை. பைஅத் செய்தே தீர வேண்டும் என்று நினைத்து உடனே பைஅத் செய்து விட்டேன். கூடவே பர்தாவும் அணியத் தொடங்கினேன். இப்பெண் இங்கும் வந்திருந்தார். ஜல்ஸாவின் காட்சியைக் கண்டார். இங்கு அமைக்கப்பட்டிருந்த கூடாரங்களைப் பார்த்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனியாக உட்கார்ந்திருக்கக் கண்ட அதே கூடாரங்களை இங்கும் கண்டார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நான் உம்மை உண்மைப்படுத்துகிறேன் என்று கூறுவதாகக் கண்டார்.

***பிறகு மாலியிலிருந்து அப்துல்லாஹ் சாஹிப் முஅல்லிம் எழுதுகிறார்:***

பமாக்குவின் ஆசிரியர் தாம்லே சாஹிப் அஹ்மதிய்யத்தின் கடும் எதிரியாவார். எப்போது அஹ்மதிய்யா ரேடியோவுக்கு போன் செய்தாலும் ஏசுவார். அவருக்கு போன் செய்யப்பட்டாலும் ஜமாஅத்தை ஏசுவார். இவ்வாறு செய்தவாறே கணிசமான நாட்கள் கழிந்தன. ஒருநாள் அவர் அழுதவாறு அஹ்மதிய்யா ரேடியோ ரப்வா FM –ற்கு போன் செய்தார். அங்குள்ள ரேடியோவுக்கு ரப்வா FM என்று பெயர். அவர் கூறினார். ஒருநாள் முன்பு இரவில் கனவில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைக் கண்டார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் கண்ட அந்த ஒளியை முன்னர் அவர் ஒருபோதும் கண்டதில்லை. பிறகு உண்மையான உள்ளத்துடன் மன்னிப்புக் கேட்கிறேன். மேலும் எனக்கு ஒரு பயமும் உள்ளது. அஹ்மதிகள் என்னை மன்னிக்காவிட்டால் இறைவனும் என்னை மன்னிக்கமாட்டான்.

முஅல்லிம் சாஹிப் அஹ்மதிய்யத்தில் இணையுமாறு அவருக்கு அழைப்பு விடுத்தார். உண்மை தெளிவாகி விட்டால் பைஅத் செய்யுங்கள் என்றதும் அவர் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார். அஹ்மதிய்யத் என்ற உண்மை இஸ்லாத்தில் இணைந்து விட்டார்.

***பிறகு மாலி மண்டலத்திலுள்ள கோலிகோரா யூசுஃப் சாஹிப் அறிவிக்கிறார்.*** இவரும் முஅல்லிம் ஆவார். கோலிரோவில் உள்ள கிராமம் சாலா குருஜியில் ஒரு பெரியவர் பிறப்பு முஸ்லிம். முஸ்லிம் பிரிவுகளைப் பார்க்கும் போது எது இறைவனைச் சார்ந்தது என்று அவருக்கு புரியவில்லை. நீண்ட காலம் அவர் உண்மையைத் தேடி வந்தார். ஆனால் எங்கும் அவருக்கு உண்மை கிடைக்கவில்லை. ஒருநாள் அவர் அஹ்மதிய்யா ரேடியோ ரப்வாவைக் கேட்டபோது முஅல்லிம் சாஹிப் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார். ஒருவர் உண்மை மார்க்கத்தை அறிய விரும்பினால் துஆ செய்யட்டும். அவருக்கு இறைவன் வழிகாட்டுவான் என்று கூறியதைக் கேட்டதும் அவருக்கு இம்முறை மிகவும் பிடித்தது. இதனை நடைமுறைப்படுத்தும் பொருட்டு 40 நாட்கள் சில்லா (தனிமையில் இறை தியானம்) செய்ய விரும்பினார். அதன் பிறகு அவர் நிய்யத் செய்தார். இறைவன் எனக்கு வழிகாட்டாதவரை நான் யாரிடமும் பேசமாட்டேன். இறைவனிடமே துஆ செய்து கொண்டிருப்பேன். இந்த வகையில் சில நாட்கள் தான் ஸில்லா செய்திருப்பார். இறைவன் அவருக்கு காட்டினான். ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்கள் அவரது வீட்டிற்கு வருகை தந்துள்ளார்கள். அன்புடன் அவரது மகனது தலையில் கை வைக்கிறார்கள். கனவைப் பார்த்தவாறு கண்கள் திறந்தன. முழு உலகிலும் அஹ்மதிகளே உண்மையில் இருக்கிறார்கள் என்ற உறுதி ஏற்பட்டது. இவர்கள் மட்டுமே இமாம் மஹ்தியின் வருகை குறித்து கூறுகிறார்கள். இந்த கனவுக்குப் பிறகு உடனே அவர் மாலியின் ஆண்டு மாநாட்டில் பங்கு பெற்றார். அங்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் புகைப்படம் பார்த்து, இவரே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) ஆவார்கள். இவர்களே தமது வீட்டிற்கு வந்திருந்தார்கள் என்று உணர்ந்தார். பிறகு பைஅத் செய்தார்.

***மாலியிலிருந்து நமது முரப்பி பிலால் சாஹிப் எழுதுகிறார்:***

சிகாகோவிலுள்ள அஹ்மதிய்யா ரேடியோ நிலையத்திற்கு ஓர் அஹ்மதி சகோதரர் வந்து கூறினார். அவரது அண்டை வீட்டுக்காரர் அவர் வீட்டிற்கு வந்து அழுதழுது மன்னிப்புக் கேட்டாராம். இவர் காரணம் கேட்ட போது, எனக்கு அஹ்மதிய்யத் மீது கடும் வெறுப்பு இருந்தது. உங்கள் ரேடியோ கேட்கும்போதெல்லாம் வெறும் ஏச்சைத் தவிர வேறெதுவும் என் வாயிலிருந்து வந்ததில்லை. நேற்றிரவும் உங்கள் முபல்லிக்கின் நேரலை நிகழ்ச்சியைக் கேட்டுக் கொண்டு ஏசியவாறு தூங்கி விட்டேன். ஆனால், அன்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கனவில் தோன்றி என்னை மிகவும் கண்டித்தார்கள். கனவிலேயே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் மன்னிப்புக் கேட்டேன். ரஸூலுல்லாஹ் என்னை மன்னித்து விடுங்கள். இனி நான் ஒருபோதும் அஹ்மதிகளை ஏசமாட்டேன். இன்றிலிருந்து நானும் அல்லாஹ்வின் அருளால் அஹ்மதி ஆவேன் என்று கூறினார். அல்லாஹ்வின் அருளால் இந்த சகோதரர் துடிப்புள்ள ஓர் முபல்லிக்கும் ஆவார்.

***மாலியிலிருந்து முஅல்லிம் அப்துல்லாஹ் சாஹிப் எழுதுகிறார்:***

மகாபூ –வில் ஒரு மாணவர் பக்ரிதிலாவுரி சாஹிப் இன்டர்நெட்டில் அஹ்மதிய்யத்தைப் பற்றி படிக்கத் தொடங்கினார். படிக்கும் போதே பிரான்ஸின் அஹ்மதிய்யா ஜமாஅத்தைத் தொடர்பு கொண்டார். பிரான்ஸின் ஜமாஅத் அஹ்மதிய்யா அவருக்கு மகாபூ ஜமாஅத்துடன் தொடர்பை ஏற்டுத்தியது. இந்த வகையில் அம்மாணவர், முஅல்லிம் சாஹிபை தொடர்பு கொண்டார். சில கேள்விகள் கேட்டார். கேள்விக்குப் பதில் கிடைத்தும், ஜமாஅத்தைப் பற்றி புரிந்தும் கூட அவர் பைஅத் செய்யவில்லை. ஒருநாள் அவர் முஅல்லிம் சாஹிபிடம் வந்து, பைஅத் செய்ய விரும்புவதாகக் கூறினார். ஏனெனில் இரவில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைக் கனவில் கண்டார். அன்னார் அவரது வீட்டிற்கு வந்திருந்தார்கள். அவர்களது முகம் முழுவதும் ஒளியாகவே இருந்தது. இதுபோன்ற முகத்தை முன்னர் ஒருபோதும் அவர் கண்டதில்லை. இதனைக் கூறி அவர் பைஅத் செய்ய விருப்பதாகக் கூறினார். பைஅத் செய்வது மட்டுமின்றி ஜமாஅத்துடன் சேர்ந்து தப்லீகும் செய்வேன் என்றார்.

***பிறகு மாலி மண்டலம் கோலிகோராவிலிருந்து அங்குள்ள முபல்லிக் ஃபாதிஹ் சாஹிப் எழுதுகிறார்:***

எனது மண்டலத்திலுள்ள கோலிகோராவில் ஒரு பெரியவர் ஸயீத் வாலி சாஹிப் நமது அந்நூர் ரேடியோ நிலையத்திற்கு வந்திருந்தார். மூதாதையர் சிலை வணங்கிகள் என்று கூறினார். இவரையும் சிலைகளை வணங்க வைக்க விரும்பினர். ஆனால் சிறு வயதிலேயே இவரது இயல்பு சிலைகளை வணங்குவதை விரும்பவில்லை. அவர் சற்று பெரியவனானதும் சிலைகளை வணங்குவதை முற்றிலும் மறுத்து விட்டார். இதனால் அவரது பெற்றோரும், பிற உறவினரும் கோபமடைந்தனர். ஆனால் இவர் அவர்களது எதிர்ப்பை சற்றும் பொருட்படுத்தவில்லை. இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு, இவருக்கு ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்களது வருகையைப் பற்றிய எதிர்பார்ப்பு இருந்தது. நீண்ட நாட்கள் எதிர்பார்ப்புக்குப் பிறகு ஒருநாள் கனவில் ஒரு மனிதர் – வெள்ளை நிறமுடைய பெரியவர் மாலியிலிருந்து வடக்குப் பகுதியில் தோன்றியுள்ளார். அந்த பெரியவரைக் காண பலர் ஒன்றுதிரண்டிருந்தனர். ஹுஸூர் (அலை) அவர்களுடைய ஒளி பொருந்திய முகத்தை அவர் முன்பு ஒருபோதும் பார்த்ததில்லை. அவர் தன்னை அறியாமலேயே ‘தாங்கள் யார்?’ என்று அவரிடம் கேட்டார். அவரது பின்னால் நின்றவர், ‘இவர் இமாம் மஹ்தி ஆவார்கள்; அவர்கள் இறங்கி விட்டார்கள்’ என்று கூறினார். இந்த காட்சிக்குப் பிறகு கண்கள் திறந்து விட்டன. அதற்குப் பிறகு ‘இமாம் மஹ்தி வந்து விட்டார்கள்’ என்று அவருக்கு உறுதி ஏற்பட்டு விட்டது. ஆனால் முஸ்லிம் பிரிவுகளின் பக்கம் பார்த்த போது எந்த பிரிவும் இமாம் மஹ்தியின் வருகையைப் பற்றி தகவல் தெரிவிக்கவில்லை. தற்செயலாக, அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அந்நூர் ரேடியோ வைத்த போது அதில் ஹஸ்ரத் இமாம் மஹ்தியின் வருகை பற்றி செய்தி வந்தது. இந்த செய்தியைக் கேட்டவுடனேயே இம்மக்களே உண்மையில் உள்ளவர்கள் என்று உறுதி ஏற்பட்டது. கனவுக்கு சில காலத்திற்குப் பிறகு அவர் அஹ்மதிய்யா பிரச்சார நிலையத்திற்கு வந்து தமது வீட்டினர் அனைவருடன் பைஅத் செய்தார். அங்கு அவருக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய புகைப்படம் காட்டப்பட்ட போது இவரே அந்த இமாம் மஹ்தி என்று கூறினார். ஏனெனில் அவர் கனவில் இவர்களைக் கண்டிருந்தார். அதற்குப் பிறகு 10 ஆயிரம் ஃபிராங்க் சந்தாவாக பெரிய தொகையை வழங்கினார். இறைவன் உண்மையைக் கண்டறிய வாய்ப்பு வழங்கியதற்காக இறைவனுக்கு நன்றி கூறுவதாகத் தெரிவித்தார்.

இவை அனைத்தும் அல்லாஹ்வின் புறமிருந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய உண்மைக்கு ஆதரவான அடையாளங்கள் ஆகும். இந்த அடையாளங்களையும், உதவிகளையும் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் மக்களின் உள்ளங்களைப் புரட்டிப் போடுகின்ற இவைகள் வேறென்னவாகும்? அந்தோ! பிற முஸ்லிம்களும் இதை உணர வேண்டும். இதன் உண்மையை அறிய துஆ செய்யுங்கள். அல்லாஹ்விடம் வழிகாட்டல் கேளுங்கள். எதிர்ப்புக்குப் பதில் நேர்வழியைத் தேடுவதன் பக்கம் அதிகமாக கவனம் செலுத்துங்கள். அல்லாஹ் இவர்களுக்கு வாய்ப்பினை வழங்குவானாக!

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

நான் அவன் தரப்பிலிருந்து வந்துள்ளேன் என்று நிரூபிப்பதற்காக எவ்வளவு அடையாளங்களை வெளிப்படுத்தியுள்ளானோ அதனை ஆயிரம் நபிமார்களுக்கு பகிர்ந்தளித்தால் கூட அவர்களின் நுபுவ்வத் நிரூபணம் ஆகி இருக்கும். இது கடைசி காலமாக இருந்தது. ஷய்த்தானின் தாய் தனது அனைத்து சந்ததிகளுடன் சேர்ந்து நடத்தும் கடைசி தாக்குதல் ஆகும். எனவே ஷய்த்தானுக்குத் தோல்வியைக் கொடுப்பதற்காக ஆயிரக்கணக்கான அடையாளங்களை ஓரிடத்தில் ஒன்றுசேர்த்துள்ளான். பிறகும் கூட மனிதருள் ஷய்த்தானாக இருப்பவர்கள்

நம்புவதில்லை. வெறும் இட்டுக்கட்டாக நியாயமற்ற ஆட்சேபனைகளை எடுத்து வைக்கின்றனர். அதன் மூலம் வேரறுந்து போக வேண்டும் என்று நினைக்கின்றனர். ஆனால் இந்த இயக்கத்தை அது முழுமையை அடையும் வரை தனது கைகளால் உறுதிப்படுத்த வேண்டும் என இறைவன் விரும்புகிறான்.

பிறகு முஸ்லிம்கள், உம்மத்தே முஸ்லிமா, முஸ்லிம் நாடுகளுக்காக துஆவுக்காக கேட்டுக் கொள்கிறேன். அல்லாஹ் இந்த நாடுகளில் சாந்தி, அமைதியை நிலைநாட்டுவானாக! நிலைநாட்ட வேண்டும் எனில், அதற்கு ஒரேயொரு தீர்வு தான் உள்ளது என்பதை அவர்கள் ஒப்புக் கொள்ள வேண்டும். அது, அல்லாஹ் ஒருவரை இமாம் மஹ்தி ஆக்கி அனுப்பியுள்ளான். அமைதியை நிலைநாட்டுவதற்காக அனுப்பியுள்ளான். அவரை ஏற்றுக் கொள்ளுங்கள். அந்த முஹம்மதிய மஸீஹை பின்பற்றுங்கள். அவர்களைப் பற்றிய முன்னறிவிப்புகளை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் செய்திருந்தார்கள். அதுதான் ஒரே தீர்வாகும். அது அவர்களின் ஈடேற்றத்திற்காக உள்ளது. அது ஒன்றே குழப்பம், கிளர்ச்சி, துக்கம் ஆகியவற்றிலிருந்து விடுதலை பெறுவதற்கான வழியாகும்.

அல்லாஹ் அவர்களுக்கு நல்வாய்ப்பினை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★


**JUMUA KHUTBA**

**HAZRAT KHALIFATUL MASIH V**

at BAIT-UL-FUTUH Mosque, London.

on **28.03.2014**

Translated by : Muallim M. NIZAMUDEEN Sb.

Typeset by : A. MUHAMMAD NISAR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456